1987 ஏப்ரல் 4]

(முற்பகல் 10-10)

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, தனியார் நிறுவனங்களை நாம் கேட்டுக்கொள்ளுகின்ற இடத்திலே தான் இருக்கிறோம். வரிச் சலுகை, நிலம், மின்சாரம், குடிநீர் வசதி இதுபோன்ற எல்லா வசதிகளையும் கொடுத்துவிட்டு, வேலைக்கு ஆள் எடுக்கும்போது அவர்கள் விருப்பப்படி யாரை வேண்டுமானாலும் வைத்துக்கொள்ளலாம், அவர்கள் எந்த முறையையும் கடைப்பிடிக்கத் தேவையில்லை என்ற ஒருதலைப் போக்கு இருக்கிறது. அதை மாற்ற விரும்புகிறேன். கேட்டுக் கேட்டுப் பயனில்லை. மயிலே மயிலே என்றால் இறகு போடாது.

புதுக்கோட்டை, காமராஜபுரம் அனைத்தும் பகுதிகளுக்குச் சாலை, குடிநீர் மற்றும் தெருவிளக்கு வசதிகள்.

284—(*வினா எண் 10378) **திரு. ஜே. முகம்மது கனி:** மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை, காமராஜபுரம் அனைத்துப் பகுதிகளுக்கும் சாலை வசதிகள், குடிநீர் வசதி, தெருவிளக்கு வசதிகள் செய்யப்பட்டனவா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ): காமராஜபுரத்தில் மொத்தமுள்ள 36 வீதிகளில் நகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்ட 10 வீதிகளுக்கு மட்டும் சாலை வசதி, குடிநீர் வசதி, தெருவிளக்கு வசதிகள் செய்யப்பட்டுள்ளன. மீதமுள்ள 26 தெருக்கள் நகராட்சி வசம் ஒப்படைக்கப்படவில்லை. எனினும், பொதுமக்கள் நலன் கருதி லாரி மூலம் எல்லாப் பகுதிகளுக்கும் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தெருவிளக்கு வசதிகளும் செய்யப்பட்டுள்ளன.

திரு. ஜே. முகம்மது கனி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் பதில் சொல்லும்போது இன்னும் 26 வீதிகள் நகராட்சியிடம் ஒப்படைக்கப்படவில்லை

என்று சொன்னார்கள். ஏன் ஒப்படைக்கப்படவில்லை? புதுக் கோட்டை நகரத்தில் 40,000-க்கும் மேற்பட்ட மக்கள் அந்தப் பகுதியில் வாழ்கிறார்கள். ஆனால் இன்றையவரையில் அவர் களுக்குப் பட்டா வழங்கப்படவில்லை. அவர்களுக்குப் பட்டா வழங்கப்படுமா? பட்டா வழங்க மாண்புமிகு அமைச்சரவர்கள் முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, ஏன் ஒப்படைக்கப்படவில்லை என்று எனக்குத் தெரியவில்லை. ஆனால் 10 வீதிகள் மட்டும்தான் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன என்று தகவல் கொடுத்திருக்கிறார்கள். மீதி 26 தெருக்களுக்கும் 26 குழாய்க் கிணறுகளும், 176 தெரு விளக்குகளும் அமைத்துள்ள தாக தகவல் கொடுத்திருக்கிறார்கள். வேறு விவரங்கள் வேண்டு மானால் தனிக் கேள்வி போடவும்.

திரு. த. மாரிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் சொல்லுகின்றபோது லாரி மூலம் தண்ணீர் வழங்குவதாகச் சொன்னார்கள். புதுத்தோப்பு, என்.ஜி.ஓ. காலனி, காமராஜபுரம், நிஜாம் காலனி போன்ற பகுதி களுக்கு லாரி மூலம் தண்ணீர் வழங்குகிறார்கள். ஆனால் அது போதிய அளவுக்கு இல்லை என்பதால் வறட்சி நிவாரணப் பணி களின்கீழ் அங்கே அடிப்பம்பு அமைத்துத் தருவார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு தலைவ ரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் யோசனை அரசின் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

சென்னை மாநகராட்சியின் ஆண்டு வருமானம்.

285—(* வினா எண் 13005) **திரு. எஸ். வேணுகோபால்:** மாண்பு மிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) சென்னை மாநகராட்சியின் ஆண்டு வருமானம் எவ்வளவு?

(ஆ) அதன் விவரம் என்ன?